ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீவண்ஶடகோப ஶ்ரீமந்நாராயண வேதாந்த மஹாதேஶிகன்
அருளிச்செய்த

# ஶ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் அடைக்கலப்பத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் அடைக்கலப்பத்து

லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹவரஶாஸந ஶேக$_2$ரோ ய:
    தார்க்ஷ்யேண நாத$_2$முக$_2$ரேண தது$_3$த்$_3$யமே ச।
ஆஜ்ஞப்த ஆதி$_3$ஶட$_2$கோப யதீந்த்$_3$ர கா$_3$தா$_2$:
    சக்ரே பராங்குஶயதீந்த்$_3$ரமஹம் தமீடே$_3$ ॥

ஒன்பதுரு நரசிங்கனுகந்துறையும் திருப்பதிகள் ⋆
    அன்புடனே பணி செய்யும் அற்புதனாம் ஆசிரியன் ⋆
முன்புற்ற சடகோபன் மொய்கழலை ஏத்தி எழும் ⋆
    பண்புடைய பராங்குசன் தன் பாதமலர் பரவினமே

‡ ஆதிமறை உருவான ⋆ ஆதிப்புள் வெற்பதனில் ⋆
    சோதி என உலகெல்லாம் ⋆ சுகம் பெறவே வந்துதித்த ⋆
ஆதிகுரு நரசிங்கன் ⋆ அருளாலே யோகியான ⋆
    ஆதிவண் சீர்ச் சடகோபன் ⋆ அடியிணை என் முடிமணியே ॥ 1 ॥

மணியான வார் உயிராம் ⋆ மணி முத்துத் தாழ் வடத்து ⋆
    மணியாகப் பெரும்பூதூர்ப் ⋆ புரந்தன்னில் வந்துதித்துப் ⋆
பிணி தீர்த்ததேசிகனே ⋆ பின்னும் இவண் வந்தனைத்தும் ⋆
    பணிய நின்ற சடகோபன் ⋆ பதப் பூவை அடைந்தேனே ॥ 2 ॥

அடைந்தென்றும் அடங்காத ⋆ ஆங்கார மாமலையைத் ⋆
    தடிந்திட்ட பெரியோனைத் ⋆ தடுத்த திறல் இரணியனை ⋆

இடந்திட்ட நரசிங்கன் ⋆ இணை அடியை எப்பொழுதும் ⋆
இடங்கிட்டி உறைகின்ற ⋆ இம் முனியை அறிந்தேனே ‖ **3** ‖

அறிந்தென்றும் அவன் அருளே ⋆ அம்புவியில் புகலின்றிச் ⋆
செறிந்தெங்கும் செல நின்ற ⋆ செல்வம் உடை வேங்கடவன் ⋆
அறந்திகழுமாமணியின் ⋆ அவதாரமாங்குருவே ⋆
நிறைந்திங்கே இம் முனியாய் ⋆ நிற்கின்றதுரைப்பேனே ‖ **4** ‖

உரைத்த தன் உத்தமகுணமே ⋆ உய்வதென்று தன் அருளால் ⋆
கரந்தெங்கும் ஓங்கிறைவன் ⋆ கலியாண குணங்களையே ⋆
உரைக்கின்ற பாடியத்தை ⋆ உம்பர் தொழ எப்பொழுதும் ⋆
உரைக்கின்ற மாமுனியை ⋆ உரைத்துரைத்தின்றுயர்ந்தேனே ‖ **5** ‖

உயர்ந்ததென்றும் உத்தமனாய் ⋆ உதவும் சீர்த் திருமாலின் ⋆
பயம் தவிர்க்கு மெய்ப் பதமே ⋆ பதமென்று பேசுகின்ற ⋆
மயர்வில்லா மூன்றினது ⋆ மாசறு சீர்ச் சாரம் எங்கும் ⋆
உயர் பெறுத்துமுயோகி பதம் ⋆ உற்றதலான் மற்றிலனே ‖ **6** ‖

மற்றவனாம் தேசிகன் தன் ⋆ வண் புகழின் வண்மை எண்ணிப் ⋆
பற்றிலன் ஆயவன் பூண்ட ⋆ பாங்குடை நற்கோசம் ஏந்தி ⋆
எத்திசையும் அக்கோசம் ⋆ ஏந்துகின்ற கையுடனே ⋆
புத்தியுள்ளே வரும் யோகிப் ⋆ பொன்னடியை மறவேனே ‖ **7** ‖

‡ மறவாதே மா நிலத்தில் ⋆ வண் புகழின் வண்மை எண்ணிப் ⋆
பிறவாதே பூமிதனில் ⋆ பின் அனைத்தும் உய்ய எண்ணி ⋆
இறையவனே புரட்டாசித் ⋆ திருக் கேட்டையில் குருவாய்ப் ⋆
பிறந்திட்ட சடகோபன் ⋆ பொன் அருள் நான் பெற்றேனே ‖ **8** ‖

‡ பெற்ற தாயாய்ப் பத்தருக்குப் ⋆ பேதம் இல்லாத் தந்தையுமாய் ⋆
மற்றுமுள்ள சுற்றமுமாய் ⋆ மன்னிய பொன் இராசியுமாய் ⋆

எத்திசையும் என்னுடைய⋆ இன் உருவாம் பாக்கியமாய்⋆
உற்ற முனி சடகோப⋆ உன் கழல்கள் அகலேனே ‖ **9** ‖

‡ அகலாமே மாறன் உரை⋆ அருத்தமுடன் அனைவர்க்கும்⋆
தகவாலே உரைக்கின்ற⋆ தன்மை உள்ள மாமுனியைப்⋆
புகலாலே பற்றினார்க்குப்⋆ புரக்கின்ற நரசிங்கன்⋆
தகவாலே முடி சூடித்⋆ தரித்தாரைப் பற்றினனே ‖ **10** ‖

‡ பத்தியுள்ள சீநிவாச⋆ பர யோகி தன் பதத்தில்⋆
பத்தி பெறும் யோகி எனும்⋆ பராங்குசன் தன் சீர் உரையாம்⋆
எத்திசையும் ஏத்த நின்ற⋆ சடகோபன் அந்தாதி⋆
முத்தி தரு நரசிங்கன்⋆ முன் அருளுக்காதினமே ‖ **11** ‖

ஸ்ரீ ஆதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் அடைக்கலப்பத்து
முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti.com sunder kidambi